RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22472

# நா. முத்துக்குமார் படைப்புகளில் வாழ்வியல் விழுமியங்கள்

ரா. ஸ்ரீபிரியா [அ, *], நா. பாலசுப்பிரமணியன் [அ]

[அ] தமிழ்த்துறை, சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்-641602, தமிழ்நாடு, இந்தியா

# Society in Na. Muthukumar's Poetry

R. Sripriya [a, *], N. Balasubramanian [a]

[a] Department of Tamil, Chikkanna Government Arts College, Tirupur-641602, Tamil Nadu, India

* Corresponding Author: priyarrcg@gmail.com

Received: 18-07-2022
Revised: 10-09-2022
Accepted: 26-09-2022
Published: 09-10-2022

**ABSTRACT**

Tamil literature serves as a reflection of individual human life. The individual exists within society, and literature evolves alongside societal changes. Na. Muthukumar addresses social themes in his poetry. For society to prosper, family relationships must also thrive. His poetry effectively captures these ideas. Additionally, his works are easy to understand. Beyond individual influence, literature shapes new ways of living. Humanity endures, but each person's discipline and culture vary. This article illustrates the connection between society and individual actions.

**Keywords:** Muthukumar, Culture, Human Life, Family Relationships

## முன்னுரை

இலக்கியங்கள் மனித வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றன. அவை வாழ்வியலின் நிலைப்பாடுகளை உள்ளது உள்ளவாறே சித்தரித்துக் காட்டுகின்றன. அவ்விலக்கியங்கள் வழி மனிதனின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாட்டு விழுமியங்களை அறிந்துகொள்ள முடிகிறது. 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பார் ஔவையார்.

மனிதனின் அக மற்றும் புற வாழ்க்கையில், பிறப்பு முதல் இறப்பு வரை நிகழக்கூடிய அனைத்துச் செயல்களுமே வாழ்வியலுக்குள் அடங்கிவிடுகின்றன. விழுமியம் என்பது ஒரு தனிமனிதனுடைய நம்பிக்கை, எண்ணம், கருத்து மற்றும் செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, மனிதனுடைய வாழ்வைச் சீரமைப்பதையே நோக்கமாகக் கொண்டது.

விழுமியம் என்பதற்குச் சிறப்பு, உயர்வு, சீர்மை, நன்மை போன்ற பல பொருள்கள் உள்ளன. ஒரு சமூகத்தில் வாழுகின்ற மக்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைகளுக்கும் வாழ்வியல் விழுமியங்களுக்கும் பல்வேறு வகைகளில் தொடர்பு உள்ளது. இவ்வகையில் மனித இயக்கத்தின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள கவிஞர் நா. முத்துக்குமாரின் படைப்புகளில் இடம்பெறும் வாழ்வியல் விழுமியங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## குடும்ப உறவுகள்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று கூறுவர். பல்கலைக் கழகம் போன்றே பல்வேறு துறைகளை உருவாக்குவதும், மனிதர்களின் பிறவிப் பயனை அடையச்செய்வதும்

குடும்பமே ஆகும். மனித சமுதாயத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகவும், சமூக அமைப்பின் அடித்தளமாகவும், பல எண்ணங்களை வழிநடத்திச் செல்லும் நிறுவனமாகவும் குடும்பம் செயல்படுகிறது.

குடும்பம் என்பதை ஆங்கிலத்தில் Family (பேமிலி) என்ற சொல்லால் குறிப்பிடுவர். இச்சொல் உரோமானிய மொழியில் உள்ள Famulus (பேமுலசு) என்ற சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டது. பேமுலசு என்பதற்கு வீட்டு அடிமை என்றும், பேமிலியர் என்றால் ஒருவருக்குச் சொந்தமான அடிமைகளின் மொத்தத் தொகை என்றும் பொருள் அமைகிறது. குடும்பம் என்பது, "நெருங்கிய மரபுத் தொடர்பான பெற்றோர், அவர்களது குழந்தைகளைக் கொண்ட ஆதாரக்குழு" என்று இராமலிங்கம் விளக்கம் தருகிறார் (Ramalingam, 2007).

இக்குடும்பமானது திருமணம், உறவுமுறை முதலான சமுதாய நிறுவனங்களோடு தொடர்புற்றும் தொடர்புறாமலும் காணப்படும் என்கிறது வாழ்வியற் களஞ்சியம். இத்தகைய குடும்பமுறையானது ஒரு தலைவன் தலைவியை மையமாகக் கொண்டு குழந்தைகளை உள்ளடக்கி நிற்கிறது. குழந்தைகள் வளரும் இடமாகவும், குழந்தைகளை வளர்த்தெடுக்கும் இடமாகவும் குடும்பம் உள்ளது. மனிதனால் தனித்து வாழ முடியாது. ஒவ்வொரு தேவைக்கும் மனிதன் பிற உறவினங்களைச் சார்ந்தே வாழ்கின்றான். குடும்ப உறவு என்பது ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையில் உள்ள தொடர்பை வெளிப்படுத்தும் பாலமாக உள்ளது. இவ்வுறவானது "இரத்தக் கலப்பாலும், பெற்றோர் கால் வழியாலும், மண உறவினாலும், ஒரு குழுவினர் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவுமுறையாக அமைகிறது" என கா. சிவத்தம்பி விளக்கம் தருகின்றார் (Sivathambi, 1978).

பிறந்த குழந்தை முதல் சிறுவர், இளைஞர், முதியவர், சுற்றத்தார், நண்பர் என அனைத்து நிலைகளிலும் உள்ள மனிதர்களின் ஒருங்கிணைப்பே குடும்ப உறவாகும். இத்தகைய குடும்பத்தின் சக்கரத்தை கணவன் - மனைவி, அண்ணன் - தம்பி, அக்கா - தங்கை, மாமனார் - மாமியார், தாத்தா - பாட்டி, சித்தப்பா - சித்தி, மாமா -அத்தை, நாத்தனார் - நங்கையார், கொளுந்தனார் - கொளுந்தியாள், பெரியப்பா - பெரியம்மா போன்ற உறவுச் சொற்கள் அலங்கரிக்கின்றன.

இச்சமுதாயத்தில் குடும்பம் என்னும் பயிர் செழித்து வளர்வதற்கு உறவுகள் என்னும் உரம் அவசியமானதாகின்றது. "ஒவ்வோர் உறவுக்கும் ஒரு வாசனை இருக்கிறது. அம்மாவிடம் விபூதி வாசனை, மனைவியிடம் பூ வாசனை, அண்ணனிடம் ரத்த வாசனை, அக்காவிடம் கண்ணீர் வாசனை." என்று குடும்ப உறவுகளின் முக்கிய இருப்பை நா. முத்துக்குமார் தன் கட்டுரை வாயிலாகப் பதிவு செய்துள்ளார் (Muthukumar, 2020).

## பள்ளிச்சூழல்

மனித இனத்தின் உயிர்நாடியாக விளங்கக்கூடிய கல்வி என்னும் சொல்லுக்கு அறிந்துகொள்ளுதல், அறிவித்தல் என்பது பொருள் ஆகும். கல்வி என்பது ஒரு சமூகம் தன்னால் செலுத்த இயலும் செயற்பங்கு ஆகும். கல்வி இல்லாத வாழ்வு என்பது ஒரு மனிதனுக்கு இருள் நிறைந்த வாழ்வாகவே இருக்கும்.

அரிஸ்டாட்டில் என்னும் கிரேக்க மேதை, "கல்வி மனிதனுடைய உள்ளுணர்ச்சியையும் அறிவுக்கூர்மையையும் விளக்கமுறச் செய்து, தன் அழகு, நலம், நன்மை, வாய்மை முதலியவற்றைச் சிந்திக்கத் தூண்டுகிறது" என்று கூறுகிறார் (Ramachandiran, 2009).

மேலும், கல்வி மிகச்சிறந்த செல்வமாகவும் கருதப்படுகிறது. கல்வியின் மேன்மையை உணர்ந்தவர்கள், உலகில் உள்ள பிற செல்வங்களைக் காட்டிலும் சிறந்த செல்வம் கல்விச்செல்வமே என்று குறிப்பிடுகின்றனர். இதனையே வள்ளுவர்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்று எடுத்துரைக்கிறார் (Parimelalagar, 2017).

பள்ளிச்சூழல் என்பது பல்வேறு அழியா நினைவுகளால் பிணைக்கப்பட்டது. இதனை நா. முத்துக்குமார்,

“பத்து வருடங்களுக்குப் பிறகு

படித்த பள்ளிக்குச் செல்கையில்

அதே தமிழ் வாத்தியாரும் ஐஸ் விற்கும் காசியும்”

என்று குறிப்பிடுகிறார். மேலும், காலம் மாறினாலும் காட்சிகள் மாறுவதில்லை என்பதையும் இக்கவிதையின் வாயிலாகப் புலப்படுத்துகிறார் (Muthukumar, 2014).

## நட்பு

மனிதன் தனக்குள் இருக்கும் சோர்வை அகற்றவும், தனிமையிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் நட்பு அவசியமாகிறது. பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனுடன் கொண்ட நட்பும், ஔவையார் அதியமானிடம் கொண்ட நட்பும் இன்றுவரை அனைவராலும் பேசப்பட்டு வருகிறது. நம்பகமான உண்மையான நட்பு, உறவுக்கும் மேலான உயர்ந்த ஓர் உறவாக அமைகிறது. நட்பு ஒருவனது வாழ்வை வளமானதாகவும் தூய்மையானதாகவும் மாற்றுகிறது.

ஒரு மனிதனது அகப்புற வாழ்க்கை சிறக்க நட்பே உறுதுணையாக விளங்குகிறது. நல்ல நண்பன் கிடைத்ததால் தான் நா.முத்துக்குமார் தன் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டு இலக்கிய வாசகராக, தான் உருவானதை, கிராமம் நகரம் மாநகரம் எனும் கட்டுரையில், “தோழர் லெனின் சுப்பையா, டீக்கடை பெஞ்சுகளில் அமரும் தோழர்களையும், ரஷ்ய இலக்கியங்களையும் அறிமுகப்படுத்தி, என் திசையைத் தடம் மாற்றினார். பின்புக்கும் பின்பு அத்தோழர்கள் மூலமாக ‘இலக்கிய வட்டம்’ வெ.நாராயணன் அறிமுகமாகி, நான் நவீன இலக்கிய வாசகனானேன்” என்று குறிப்பிடுகிறார் (Muthukumar, 2020).

மேலும், “இந்த மண்ணில் எல்லா உறவுகளையும் விட மேன்மையானது நட்பு மட்டுமே ஆகும். நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும்.” என்றும் நட்பின் மேன்மை குறித்து நா. முத்துக்குமார் விளக்கம் அளிக்கிறார் (Muthukumar, 2011).

## காதல்

சங்க இலக்கியங்களில் முதன்முதலில் காதல் உணர்வு ஏற்படுவதை இயற்கை அல்லது தெய்வீகப் புணர்ச்சி என்று கூறியுள்ளனர். காதலைப் பாடாத கவிஞர்களே இல்லை. மனித இனம் இம்மண்ணில் தோன்றிய காலத்திலேயே காதலும் தோன்றிவிட்டது. காதல் என்பது பெண் மற்றும் ஆணின் ஈர்ப்பு நிலை மற்றும் மனித வாழ்வை இயக்கும் அடிப்படை ஆற்றலாக அமைகின்றது. பாரதியின் குயில்பாட்டு,

“காதல் காதல் காதல்

காதல் போயின் காதல் போயின்

சாதல் சாதல் சாதல்”

என்று காதலின் அதீத அன்பை வெளிப்படுத்துகிறது.

காதல் குறித்து நா. முத்துக்குமார் பாலகாண்டம் என்ற நூலில், “காதல், நம் மனதில் உள்ள மெல்லிய பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்கிறது. மழையை மட்டுமல்ல, வெயிலையும் ரசிக்கச் செய்கிறது. பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் வெட்கப்படும் தருணங்கள் உண்டு” என்று அறிமுகப்படுத்துகிறார் (Muthukumar, 2020).

மலைகளுக்கு நடுவில் நதிகள் இயற்கையோடு கலந்திருப்பதைப் போன்றே உலகின் பல்வேறான பொய்த் தோற்றங்களும் காதலர்களுக்கிடையில் உண்டு என்பதைக் கீழ்க்காணும் கவிதையில் நா. முத்துக்குமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

“எல்லா நதிகளும்

மலைகளுக்கிடையில்,

உலகின்

எல்லா மாயைகளும்

காதலர்களுக்கிடையில்”

என்று குறிப்பிடுகிறார் (Muthukumar, 2014).

## இல்லறம்

தமிழ்மொழியில் இல்லறத்தை வலியுறுத்தும் நூல்கள் அதிகமாக உள்ளன. பண்டைத் தமிழர், அறத்தோடு பொருந்திய வாழ்வினையே இல்லறம் என அழைத்தனர். அதுவே எக்காலத்திற்கும் பொருந்தி வருவதாய் அமைகிறது. ஆணும் பெண்ணுமாகிய இருவரும் இணைந்து வாழ்க்கை நடத்துவதே இல்லறம் ஆகும். இல்லறத்திற்குச் சிறப்பு சேர்ப்பதே அகவாழ்வின் இன்றியமையா நோக்கமாகும். ஆணும் பெண்ணும் இல்லறத்தை நல்லறமாக எவ்வாறு நடத்த வேண்டுமோ அம்முறையால் நடத்தி, அறநெறியில் இல்வாழ்க்கை வாழ்பவர்கள், பிற வழிகளில் வாழ்பவர்களை விடத் தலைசிறந்தவர்களாகின்றனர்.

இல்லறமானது மற்ற எவ்வகைப்பட்ட அறங்களுக்கும் ஆதாரமாக விளங்குகிறது. இல்லறத்தை நடத்துவது இன்ப நுகர்ச்சிக்காக மட்டுமல்லாமல், அது பலருக்கும் துணையாக நின்று உதவும் அறமாகவும் விளங்குகின்றது. தாய்க்குப் பின் தாரம் என்பார்கள். தன் மனைவியின் பெருமையை நா. முத்துக்குமார், “உன் கண்களில் நான் உன் கண்களை மட்டுமா பார்த்தேன். அதில் என்னைப் பார்த்தேன். என் எதிர்காலத்தைப் பார்த்தேன். இலையுதிர் காலத்தையும் கோடை காலத்தையும் கடந்து வந்து தகிக்கும் என் பாதங்களுக்கான இளைப்பாறுதல் தரும் நிழலைப் பார்த்தேன். என் காயங்களின் நெருப்பை அணைக்கும் ஈரத்தைப் பார்த்தேன். எல்லாவற்றிற்கும் மேலாக என் தாயைப் பார்த்தேன்” என்று குறிப்பிடுகிறார் (Muthukumar, 2011)

அறநெறி பிறழாமல் இணைந்து வாழும் புனிதமான இல்லறத்தின் சிறப்பை மேற்கண்ட வரிகளால் சுட்டுகிறார்.

தம்மை உணராத தம்பதியினர் என்று யாரும் இருக்க முடியாது என்பதை, “எனை ஆள வந்தவளே! தினம் தினம் நமக்குள் நடக்கும் சின்னச் சின்னச் சண்டைகளின் ஊடல்களில் நீ வாடிவிடுகிறாய். ஊடல்களுக்குப் பிறகு நடக்கும் பெரிய பெரிய சமாதானங்களில் நீ மலர்ந்தும் விடுகிறாய். இந்த உலகத்தில் எல்லாப் பூக்களும் மலர்ந்த பின்தான் வாடும்! வாடிய பின் மலரும் ஒரே பூ நீதானடி! உன்னை மலரவைக்கவே வாட வைக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா என்ன?” என்று குறிப்பிடுகிறார் (Muthukumar, 2011).

## விருந்தோம்பல்

வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்கள் மனம் கோணாதபடி உபசரிக்க வேண்டும். விருந்தினர்களை முகமலர்ச்சியோடு வரவேற்று உபசரித்தால் தான், அவர்கள் வீட்டில் திருமகள் மனமகிழ்ந்து உறைவாள் என்பதனை,

“அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து

நல்விருந்து ஓம்புவான் இல்”

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார் (Parimelalagar, 2017).

மேலும்,

“வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

மிச்சில் மிசைவான் புலம்”

என்றும் குறிப்பிடுகிறார் (Parimelalagar, 2017).

அதாவது, ஒருவரது வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தால், அமிழ்தமாக இருந்தாலும் அதை அவர்களுக்கு உபசரித்து விட்டு, பிறகு எஞ்சியதைத்தான் வீட்டில் உள்ளவர்கள் உண்ணவேண்டும் என்று இக்குறளில் வள்ளுவர் கூறுகிறார்.

கொன்றைவேந்தனில் ‘மருந்தே ஆயினும் விருந்தோடு உண்’ என்று ஔவையார் குறிப்பிடுகிறார். இல்லம் நாடி வரும் விருந்தினரை வீட்டின் உரிமையாளர் பத்தடி தூரம் சென்று வரவேற்றல் வேண்டும். அதுபோல் விருந்தினர் செல்லும் போதும் பத்தடி பின் சென்று வழியனுப்புதல் வேண்டும். இதனைத் தமிழர் தம் மரபாகவே இன்றும் கடைப்பிடிக்கின்றனர்.

நா. முத்துக்குமார் சிறுவயதில் தன் தாய்வழிப் பாட்டியிடம் கண்ட விருந்தோம்பல் பண்பினை, “மண்சட்டியில் ஆயா வைக்கிற மீன் குழம்போட ருசியை இன்னிக்கி வரைக்கும் இவன் வேற எங்கேயும் சாப்பிட்டதில்ல. மீன் குழம்பு இல்ல. அது தேன் குழம்பு. வாய்யான்னு பாசத்தோடு கூப்பிட்டுப் பரிமாறும் அழகு யாருக்கும் கிடைக்காது, அது நான் பெற்றது” என்ற வரிகளால் குறிப்பிடுகிறார் (Muthukumar, 2011).

## மனிதநேயம்

மனித வாழ்விற்கு மிக அடிப்படைக் காரணியாக அமைவது மனிதநேயமே ஆகும். நேயம் என்ற சொல்லுக்கு அன்பு என்று பொருள். மனிதர்கள் மற்றவர்களிடம் காட்டும் அன்பே மனிதநேயம் என்றழைக்கப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் பிறரிடத்தில் அன்பு, கருணை மற்றும் நன்றி உணர்வோடு வாழவேண்டும். அப்போது தான் மனிதன் பிறவிப் பயனை அடைய முடியும். மனிதநேயம் உலகளாவியது. அரவணைத்து அக்கறை காட்டுவது. சான்றோர்களின் கடமைகளுள் முக்கியமானது. நாடு, மொழி, இனம், மதம் போன்ற பல்வேறு எல்லைகளைக் கடந்து மேலோங்கி நிற்பது. மனித இனத்தின் நாகரிக வளர்ச்சியோடு இணைந்திருப்பது.

தெய்வம் வந்து ஆடும் போது, பெண்ணின் கலைந்த முந்தானையைச் சரிசெய்யும் மனிதநேயம் உள்ள நபர்களும் இங்கு வாழ்கின்றனர் என்பதை,

“தெய்வம் வந்து ஆடும் பெண்ணின்

விலகிய முந்தானையை

யாரோதிருத்துகிறார்கள்”

என்ற கவிதை வாயிலாக இவர் பதிவு செய்துள்ளார் (Muthukumar, 2014).

எறும்புகள் ஊர்ந்து செல்வது பற்றிக் குறிப்பிடும் போது, பம்ப்செட்டில் ஓடும் நீரால் எறும்புகள் அழிக்கப்படுவதாக, தன் மனித நேயத்தைப் பறைசாற்றும் விதமாக நா. முத்துக்குமார்,

“வாய்க்காலில் உள்ள எறும்புகள்

வீடு போய்ச் சேரட்டும்

பம்ப்செட்டை நிறுத்துங்கள்”

என்று கவிதை படைக்கிறார் (Muthukumar, 2014).

## கோபம்

மனிதர்களிடம் தோன்றும் ஒரு கடுமையான உணர்ச்சியின் வெளிப்பாடே கோபம் ஆகும். இது நடத்தையிலும் உடலிலும் பல்வேறு விதமான மாறுதல்களை ஏற்படுத்தக்கூடியது. இது தன்னைத் தானே அழித்துக்கொள்வதற்கான மிகக் கொடிய ஆயுதம் என்றும் கூறலாம். சினம், வெகுளி, சீற்றம், கதம் போன்ற சொற்கள் கோபம் என்ற பொருளைக் குறிக்கின்றன. கோபத்தினால் உடல் மற்றும் மனநலம் பாதிக்கப்படுகிறது. ஒரு தனிப்பட்ட மனிதனின் மனதில் எதிர்மறையான பாதிப்புகளை உண்டாக்கக் கூடியதாகக் கோபம் விளங்குகிறது.

குழந்தைகளின் கோபமானது விருப்பு வெறுப்பற்ற இயலாமையின் வெளிப்பாடே ஆகும். அதனால், இது பிளவை ஏற்படுத்தாது என்பதை, "சில சமயங்களில் வீட்டில் சண்டை போட்டு கோபித்துக் கொள்ளும் போது யாருக்கும் தெரியாமல் பரண்மேல் ஒளிந்து கொள்வேன். வீட்டிலேயே நான் இருப்பது அறியாமல் கவலையுடன் வெளியே தேடிக்கொண்டிருப்பார்கள்." என்று குறிப்பிடுகிறார் (Muthukumar, 2020).

ஆனால் தற்போதைய காலகட்டங்களில் குழந்தைகளின் கோபமானது சட்ட விரோதமான செயல்களுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்வதாக அமைகிறது.

## பிழைப்பு

ஒரு மனிதன் தன் குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பணத்தையும் பொருளையும் பெறுவதற்கான தேடலே பிழைப்பு என்று பெயர் பெறுகிறது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று பேசப்பட்ட காலம் இன்று மாறிவிட்டது. ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் இன்றைக்குப் பொருள் தேடலில் ஈடுபடுதல் என்பது அவசியமானதாகிறது.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் பின் தள்ளப்பட்டு இருக்கும் பெண்கள் ஓட்டுநராக, மருத்துவராக, செவிலியராக, வழக்கறிஞராக ஆசிரியராக, இன்னும் பல்வேறு தொழில் துறைகளில் உயர்ந்த இடத்தில் அலுவலராகவும் தொழில்புரியக் கூடியவர்களாகவும் இன்று உள்ளனர். பெண்கள் பொறுமையானவர்கள். இன்றைக்குப் பெண்கள் இல்லாத இடமே இல்லை என்றே கூறலாம். தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ளப் பெண்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

இதனைப் பட்டாம்பூச்சி விற்பவன் கவிதையில், மனுஷிகள் என்ற தலைப்பில் நா. முத்துக்குமார்,

"பத்து வருடமாய்

மிளகாய்த் தூளுக்கு மத்தியில்

மதுக்குப்பி மறைத்து

பாண்டிச்சேரியிலிருந்து

கடத்தி விற்க முடிகிறது

பேச்சியம்மா கிழவியால்

வாசனையாகப் பேசி

அய்யர் தெருவிலும்

விற்று விடுகிறாள்

கருவாட்டுக்காரி"

என்ற வரிகளில் காட்சிப்படுத்துகிறார் (Muthukumar, 2014).

சமுதாயத்தின் அனைத்து இடங்களிலும் தங்கள் பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாகப் பெண்கள் ஏதேனும் ஒரு வேலை செய்து பிழைப்பு நடத்துவதைத் தற்போது பல இடங்களிலும் காணமுடிகிறது.

## முடிவுரை

மனிதனின் சீரான வாழ்க்கைக்கு அடித்தளமாய் அமைவது வாழ்வியல் விழுமியங்களே ஆகும். இவ்விழுமியங்கள் மனித இயக்கத்தின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றன. அவ்வகையில் மனித சமூகத்தை உயிர்ப்போடு இயங்கச் செய்வது குடும்ப உறவு முறையே ஆகும். இதுவே இல்லறம் என்னும் நல்லறமாக, தோளோடு தோள் நிற்கும் நட்பாக, கசிந்து உள்ளுருகும் காதலாக, அறிவை மயக்கம் கொள்ளச் செய்யும் கோபமாக, பொருளாதாரச் சூழலை எதிர்கொள்ளும் பிழைப்பாக அமைகிறது. இதுவே குடும்ப உறவு முறைகளுக்கு விழுமியமாக அமைகிறது. மேலும், இதுவே இம்மானுடத்தை உயிர்ப்போடு இயங்கச் செய்யவும் செய்கிறது.

## References

Muthukumar, N. (2011) Aniladum Mundril, Vikadan Presuram, Chennai, India

Muthukumar, N. (2014) Kulainthagal Nirantha Veedu, Pattampoochi Pathipagam, Chennai, India

Muthukumar, N. (2020) Muthukumar Katuraikal, Discovery Publications, Chennai, India

Parimelalagar, (2017) Thirukural, JKR Publications, Sivakangai, India

Ramachandiran, K. (2009) Mu Metha Kavithaikalil Samuthaya parvai, Narmadha Pathippagam, Chennai, India

Ramalingam, P. (2007) Manida Ulaviyal, Saratha Pathippagam, Chennai, India

Sivathambi, K. (1978) Navalum Valkaiyum, Tamil Puthagalayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License